சுருக்கம்

வேளாண்மை – வேளாண்மைப் பொறியியல் – தேனி மாவட்ட வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில் தமிழ்நாடு தேயிலை விற்பனை மையம் (Tan Tea Marketing Outlet) கட்டுவதற்கு இடம் ஒதுக்கீடு மற்றும் வாடகை நிர்ணயம் செய்து ஆணை வெளியிடப்படுகிறது.

---

வேளாண்மைத் (வே.பொ.1) துறை

அரசாணை (நிலை) எண். 83 நாள்:23.02.2016

திருவள்ளுவர் ஆண்டு 2047 மாசி 11

படிக்கப்பட்டது:

1 தமிழ்நாடு தேயிலை தோட்டக்கலை நிறுவனம், குன்னூர், அவர்களின் கடித எண்.54/1788/2015 (I I), நாள் 17.2.2015.

2 தேனி, செயற்பாறியாளர், பொதுப்பணித்துறை கட்டிடம் (க&ப) கோட்டம், கடித எண்.797/வப/கோ.78/2015, நாள் 30.6.2015.

3 தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) கடித எண். பொறி1/35769/15, நாள் 09.09.2015 (ம) 25.1.2016.

----

ஆணை:–

மேலே மூன்றாவதாகப் படிக்கப்பட்ட கடிதத்தில், தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்கள் மதுரை – தேனி சாலையில், தேனி அல்லி நகரம் நகராட்சிக்கு உட்பட்ட புல எண்.பழைய எண்.212, புதிய எண்.15–ல் அமைந்துள்ள வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில், வேளாண்மைப் பொறியியல் துறைக்கு சொந்தமான இடத்தில் தமிழ்நாடு தேயிலை விற்பனை மையம் (Tan Tea Marketing Outlet) ரூ.600/– மாத வாடகை தொகையில் (10’x10’) 100 சதுர அடியில் அமைக்க அனுமதி வழங்கிடுமாறு அரசினைக் கேட்டுக் கொண்டுள்ளார்.

2. மேலே இரண்டில் படிக்கப்பட்ட கடிதத்தின் அடிப்படையில் அரசுக்கு பெறப்பட்ட தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்) அவர்களின் கருத்துரு அரசால் கவனமாக பரிசீலிக்கப்பட்டு, தேனி வேளாண்மைப் பொறியியல் துறை வளாகத்தில், 10’x10’=100 சதுர அடியில் ரூ.600/– என்ற மாத வாடகையில், தமிழ்நாடு தேயிலை விற்பனை மையம் (Tan Tea Marketing Outlet) ஒன்றினை உரிய விதிமுறைகளைப் பின்பற்றி அமைக்க, அனுமதி அளித்து அரசால் ஆணையிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

ச.விஜயகுமார்
வேளாண்மை உற்பத்தி ஆணையர்
மற்றும் அரசு செயலாளர்

பெறுநர்

தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்), சென்னை –35.

(த.பி.பா)

மேலாண்மை இயக்குநர்,
தமிழ்நாடு தேயிலை கூட்டுறவு நிறுவனம்,
TANTEA Complex, குன்னூர் – 643 101,
நீலகிரி மாவட்டம். (வழி) தலைமைப் பொறியாளர் (வேளாண்மைப் பொறியியல்),
சென்னை –35.
சம்பளக் கணக்கு அலுவலர், சென்னை–35.
முதன்மை மாநிலக் கணக்காயர், சென்னை –18. (பெயரில்).
முதன்மை மாநிலக் கணக்காயர் (G & SSA), சென்னை-18.
முதன்மை மாநிலக் கணக்காயர் (E & RSA), சென்னை-18.
ஆணையர், கருவூலக் கணக்கு அலுவலகம், சென்னை–15.
உறைவிட தணிக்கை அலுவலர், முதன்மை மாநிலக் கணக்காயர் அலுவலகம்,
(சமூகத் தணிக்கைப்பிரிவு) சென்னை–9.

<u>நகல்</u>

வேளாண்மை உற்பத்தி ஆணையர் மற்றும் அரசு செயலாளரின் தனிச்செயலர்,
வேளாண்மைத் துறை, சென்னை–9.
வேளாண்மை (அநமு.3) துறை, சென்னை–9 (பட்டியல் படுத்தும் வகைக்கு).
நிதி (வேளாண்மை) த்துறை, சென்னை–9.
தொடர்புடைய கோப்பு (எண். 24185/வே.பொ.1/2015).
இருப்பு கோப்பு/உதிரிகள்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

23/2/16
பிரிவு அலுவலர்
23-2-16